# 14 நாட்டார் வழிபாடு

நாட்டுப்புற மக்களால் மிக நீண்ட காலமாக வணங்கப்பட்டு வரும் கிராமக் கடவுள்கள் " சிறுதெய்வங்கள்" என்று அழைக்கப்பெறுகின்றார்கள். இவர்களுக்கு நாட்டார் தெய்வங்கள், குல தெய்வம், சிறுதெய்வம், ஊர்த்தெய்வம், காவல் தெய்வம், கிராமியத் தெய்வம் என்ற மறுபெயர்களும் உள்ளன. இந்த தெய்வங்களின் வழிபாடானது நாட்டார் மக்களின் நம்பிக்கை அடிப்படையிலும், அவர்கள் முன்னோர்கள் கற்றுத்தந்த முறைப்படியும் நடக்கிறது. உலகின் தொன்மையான வழிபாடு இயற்கை வழிபாடாகும். அதற்கு அடுத்ததாக சிறுதெய்வ வழிபாடு இருக்கிறது. சிறுதெய்வ வழிபாடு திட்டவட்டமான வரையறை இல்லாதது.



நாட்டார் வழிபாடு

இவை நாட்டுப்புற மக்களின் காவல் தெய்வங்களாக நோய் நீக்கி வாழ்க்கைக்கு நலம் தருபவையாகக் கருதி வணங்கப்படுகின்றன. இத்தெய்வங்கள் பரந்து பட்ட தொடர்பில்லாமல் கிராமங்களையே இருப்பிடமாகக் கொண்டு, நாட்டுப்புற மக்களின் மரபோடு நீங்காத உறவு கொண்டு விளங்குகின்றன. வணங்கினால் நன்மையும் வணங்காவிட்டால் தீமையும் பயப்பன என்ற ஆழ்ந்த நம்பிக்கை காரணமாகப் பாமர மக்களால் இவை வழிபட்டு வருகின்றன.

சிறுதெய்வக் கோயில்கள் பெரும்பாலும் மரத்தடியிலும் வயல், குளம், ஏரி, ஆறு போன்ற நீர் நிலைகளுக்கு அருகிலுமே அமைந்திருக்கும். இக்கோயில்கள் கிழக்கும் வடக்கும் பார்த்து இருத்தல் வேண்டும் என்பது மரபு. நீங்கள் வழிபடச் செல்லும் கோயிலிலும் கூட இதனைப் பார்க்க முடியும்.

சிறு தெய்வங்களுக்கு கோயில் எழுப்பி வழிபடும் வழக்கம் பிற்காலத்தில் தோன்றிய ஒன்றாகும். பெரும்பாலும் திறந்த வெளியில் மரத்தின்

கீழேயே தெய்வமாகக் கருதி வழிபடத் தக்க கல், சூலாயுதம், வேல், அரிவாள், விளக்கு மாடம் போன்றவை இருக்கும். வேறு சில இடங்களில் பீடம் அமைக்கப்பட்டு மேற்கூறிய வழிபாட்டுப் பொருள்கள் வைக்கப்பட்டிருக்கும். இதற்கு அடுத்த நிலையில் சிலைகள் (தெய்வச் சிலைகள், குதிரை, நாய்) உருவாக்கப்பட்டு அவை திறந்த வெளியிலோ கோயிலினுள்ளோ வைக்கப்பட்டிருக்கும். இக்கோயில் கூரைகள் வேயப்பட்டதாக சதுர வடிவிலோ, வட்ட வடிவிலோ அமைந்திருக்கும்.



நாட்டார் தெய்வ வழிபாட்டில் சிற்பக்கலை, விக்கிரகக்கலை முதலானவற்றுக்கு இடமில்லை. விசேட இசைக்கருவிகள் இசைக்கப்படுவதில்லை. நாட்டார் தெய்வ வழிபாட்டுச் சடங்குகள் பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபடும். இவ்வழிபாடு ஆகம முறைசாராத ஒன்றாகும். இருப்பினும் காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக ஆகம வழிபாட்டில் செல்வாக்கும் இடம்பெறுகின்றது.இச்சடங்கை பூசாரிமார், கட்டாடிமார், கப்புகனார், திருநீற்று ஆண்டிகள் போன்றோர் மேற்கொள்வர்.



**மதுரைவீரன்**

சிறுதெய்வ வழிபாடுகளில் தெய்வங்களை அலங்கரித்தல்,பூசை செய்தல், படையல் போடுதல், நேர்த்திக் கடன் செலுத்துதல், ஆடியும் பாடியும் துதித்தல் போன்றவை வழிபாட்டு முறைகளாக அமைகின்றன.

இலங்கையில் இவ்வழிபாடு யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை, மலையகம் போன்ற பிரதேசங்களில் மக்களால் வழிபடப்படுகின்றன.

நாட்டார் வழிபாட்டில் ஆண் தெய்வங்களும் பெண் தெய்வங்களும் வழிபடப்படுகின்றனர். வைரவர், ஐயனார், வதனமார், அண்ணாமார், பெரியதம்பிரான், மதுரைவீரன் முதலான ஆண் தெய்வங்களும் அம்மன், காளி, மாரி, பேச்சி முதலான பெண் தெய்வங்களும் வழிபடப்படுகின்றனர்.

## பயிற்சிகள்

1. சிறு தெய்வங்களுக்குரிய ஏனைய பெயர்கள் எவை?

2. கிராமியத் தெய்வங்கள் எவற்றின் பொருட்டு வழிபடப்படுகின்றனர்?

3. சிறுதெய்வங்களின் கோயில்கள் எவ்வாறான இடங்களில் அமைந்து காணப்படும்?

4. கிராமிய வழிபாட்டில் பூசை நிகழ்த்துபவர் எப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றார்?

5. கிராமிய வழிபாட்டில் இடம்பெறும் ஆண் கடவுளர் யாவர்?

## செயற்பாடு

★ உமது பிரதேசத்தில் வழிபடப்படும் கிராமியத் தெய்வங்களைப் பட்டியல்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.

## பாடச்சுருக்கம்

★ நாட்டுப்புற மக்களால் மிக நீண்ட காலமாக வழிபடப்படும் தெய்வம் கிராமியத் தெய்வம் என அழைக்கப்படும்.
★ உலகின் தொன்மையான வழிபாடு இயற்கை வழிபாடாகும்.
★ எளிமையான வழிபாட்டு முறையாகும்.
★ இவ் வழிபாட்டு முறை பிரதேசத்துக்கு பிரதேசம் வேறுபடும்.
★ பிராமணர் அல்லாதோர் இப்பூசைகளை நிகழ்த்துவர்.